இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 13-08-2025

# தேர்தல் ஆணையத்தின் ஆணவம்!

**பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். இது குறித்த ஆவணங்களை உச்சநீதிமன்றம் கேட்டால், 'தர முடியாது' என்று ஆணவத்துடன் பதில் அளித்திருக்கிறது தேர்தல் ஆணையம். தேர்தலை முறையாக நடத்துவதுதானே அவர்களது வேலை. அதைக் கூட முறையாகச் செய்யாமல், அநியாயமாகச் செயல்பட்டு இருக்கிறது தேர்தல் ஆணையம். அதுகுறித்து முறையான விளக்கம் கூடச் சொல்லத் தயாராக இல்லை என்றால் இவர்களுக்கு இந்த தைரியத்தைக் கொடுப்பது யாராக இருக்க முடியும்? ஒன்றிய பா.ஜ.க. அரசு தனக்குப் பின்னால் இருக்கும் துணிச்சலில்தானே இதைச் செய்கிறார்கள்?**

65 லட்சம் பேரை எப்படி நீக்கினீர்கள் என்று கேட்பதற்கு அரசியல் கட்சிகளுக்கு உரிமை இல்லையா? உச்சநீதிமன்றத்துக்கு உரிமை இல்லையா? அல்லது யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமை தேர்தல் ஆணையத்துக்கு இல்லையா?

"பீகாரில் முதற்கட்டமாக சிறப்புத் திருத்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். அதனடிப்படையில் ஆகஸ்ட் 1 அன்று வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டு இருக்கிறோம். அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் எந்தக் காரணத்துக்காகவும், முன்னறிவிப்பு இன்றி நீக்கப்படாது. வாக்காளருக்கு முன்னதாக நோட்டீஸ் அனுப்புவோம். அவர் உரிய ஆவணங்களை வழங்க நேரம் கொடுப்போம். அதன்பிறகே வாக்காளர் பெயரை நீக்குவோம். எவர் ஒருவர் பெயரும் நீக்காமல் இருக்க முயற்சிகளை எடுத்து வருகிறோம். வரைவு வாக்காளர் பட்டியலில் ஒருவரின் பெயர் இடம்பெறவில்லை என்றால் இறுதி வாக்காளர் பட்டியலில் அவர் நீக்கப்படுவார் என்று அர்த்தமில்லை" என்று சொல்கிறது தேர்தல் ஆணையம். **'நாங்களாக நீக்க மாட்டோம், உங்களிடம் சொல்லிவிட்டு நீக்குவோம்'** என்பதைத்தான் சுற்றி வளைத்துச் சொல்கிறது தேர்தல் ஆணையம்.

**"இந்தப் பணியின் போது மனிதத் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது"** என்பதையும் சொல்வது தேர்தல் ஆணையம் தான். இந்த நடைமுறையில் **'மனிதத் தவறுகள்'** அதிகம் நடந்துள்ளன. அதனால்தான் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் அதிகமாகக் கேள்விகள் எழுப்புகின்றன.

உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் தனது ஆணவத்தை மொத்தமாகக் காட்டி இருக்கிறது தேர்தல் ஆணையம். "வரைவு வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலைத் தயார் செய்வது குறித்து யாரிடமும் தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்கத் தேவையில்லை. அவர்களை நீக்கியதற்கான காரணங்கள் குறித்தும் யாரிடமும் பகிர வேண்டிய அவசியமில்லை. இது தொடர்பாக விபரங்களைத் தரச் சொல்லி மனுத் தாக்கல் செய்வதே ஏற்புடையது அல்ல" என்பதை விட ஆணவம் இருக்க முடியுமா?

செய்த செயல் சாதாரணமானது அல்ல. சிறப்பு நடவடிக்கை என்ற பெயரால் மாபெரும் ஜனநாயகப் படுகொலையை பீகாரில் அரங்கேற்றி வருகிறார்கள். பீகார் மாநிலத்தில் இந்தாண்டு இறுதியில் சட்டசபைத் தேர்தல் நடைபெறுகிறது. இதையடுத்து பீகாரில் **'சார்'** எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த நடவடிக்கையை (special intensive revision SIR) பீகார் அரசு எடுத்து வருகிறது.

**2003-ஆம் ஆண்டுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் சேர்ந்தவர்கள் இந்திய குடிமகன் என்பதற்கான பிறப்புச் சான்றிதழ் அல்லது பாஸ்போர்ட் உள்ளிட்ட 11 ஆவணங்களில் ஏதாவது ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். குடியுரிமைச் சட்டத்தின் இன்னொரு வடிவம் போல இதனை மாற்றி விட்டார்கள். ஒருவர் தனது பிறந்த நாளையும், பிறந்த ஊரையும் சரியானதுதான் என நிறுவ வேண்டும். இந்த ஆவணங்கள் இல்லை என்றால், அவர்களது பெற்றோர்களின் குடியிருப்பு ஆவணங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதனையும் வழங்காவிட்டால் வாக்காளர் பெயரை நீக்குவது குறித்து அந்தப்பகுதி வாக்குச்சாவடி அலுவலர் முடிவு செய்வார். இந்த அடிப்படையில் சுமார் 65 லட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி விட்டார்கள்.**

8 கோடி பேர் தொடர்புடைய பிரச்சினையை 25 நாட்களுக்குள் முடிக்க நினைத்தது மாபெரும் தவறு. ஓராண்டு காலம் செய்ய வேண்டிய வேலை இது. அந்த 8 கோடி பேரில் 3 கோடிப் பேர் தங்களது ஆவணங்களை இணைத்து அதனை இணையத்தில் பதிய வேண்டும். இதற்கே பல மாதங்கள் தேவைப்படும். நிரப்பப்பட்ட படிவங்களுடன் அலுவலர்கள், ஒவ்வொரு வாக்காளர்களையும் வீடுகளுக்கு வந்து சந்திப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அப்படி எந்தச் சந்திப்பும் பீகாரில் நடக்கவில்லை.

பீகாரில் பிறந்து, அங்கேயே வாழ்ந்து, பெற்றோர்கள் மற்றும் உறவினர்களை அங்கே விட்டுவிட்டு, பல்வேறு மாநிலங்களில் தின ஊதியம், வார ஊதியம், மாத ஊதியம் பெற்று தற்காலிகமாக வேலை பார்த்து வரும் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. இது பீகார் மக்களின் வாழ்வுரிமை பறிப்பு ஆகாதா?

**இன்று சென்னையில் இருக்கும் ஒரு பீகார் தொழிலாளி, நாளை பஞ்சாப்பில் இருப்பார். அடுத்தமாதம் பீகார் சென்று விடுவார். பின்னர் கர்நாடகாவுக்கு வேலைக்கு வந்துவிடுவார். ஆனால் அவரது நிரந்தர வாழிடம் என்பது பீகார்தானே? அப்படிப்பட்டவர் வாக்குரிமை பறிக்கப்பட்டது கொடூரமான மனோபாவம் அல்லவா?**

**வறுமை சூழ் வாழ்க்கைத் தரம் உள்ள அந்த மாநிலத் தொழிலாளிகள் பலரிடமும் கல்விச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், அரசு பணி அடையாள அட்டை, பாஸ்போர்ட், பிறப்புச் சான்று ஆகியவை இல்லை. அவர்களிடம் இருப்பது ஆதார் அட்டையும், குடும்ப அட்டையும். ஆனால் அது இரண்டையும் தேர்தல் ஆணையம் ஏற்கவில்லை.**

இவை அனைத்தையும் விட கொடுமை, தேர்தல் ஆணையமே வழங்கிய வாக்காளர் அடையாள அட்டையை தேர்தல் ஆணையமே ஏற்கவில்லை. அதாவது, ஒரு குடிமகனின் வாக்குரிமையைப் பறிக்க மட்டுமே தேர்தல் ஆணையம் சிந்தித்துள்ளது. இதனைத்தான் **'மனிதத் தவறு'** என்கிறோம்.

**ஆம்! 'மனிதத் தவறுகள்' அதிகம் நடந்துள்ளது. தவறான மனிதர்களிடம் ஆணையம் சிக்கி உள்ளது. தவறான மனிதர்களின் கைப்பாவையாக தேர்தல் ஆணையம் மாறிவிட்டது.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.08.2025) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 177 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள், மீன் விதை பண்ணை மற்றும் பயிற்சி மையத்துடன் கூடிய அலுவலகக் கட்டடம் என 9 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் இரா. கண்ணன், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் கே.வி. முரளீதரன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் (பொறுப்பு) டாக்டர் இர. நரேந்திர பாபு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தலைமன்னாருக்கு பயணிகள் கப்பல் சேவை - சாகர்மாலா திட்டத்தின்கீழ்

# இராமேஸ்வரம் துறைமுகத்தை மேம்படுத்திட நிதி வழங்குக!

## புதுடெல்லியில் ஒன்றிய அமைச்சரிடம் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஆக. 13 - பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (11.8.2025) புதுடெல்லி டிரான்ஸ்போர்ட் பவனில், ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பனாந்தா சோனவால் அவர்களை சந்தித்து, சாகர்மாலா திட்டத்தின்கீழ் திட்டங்களை விரைவாக செயல்படுத்தவும், நிதி வழங்கவும் வலியுறுத்தினார்.**

இராமேஸ்வரம் (இந்தியா) மற்றும் தலைமன்னார் (இலங்கை) இடையே சர்வதேச பயணிகள் கப்பல் சேவையைத் தொடங்குவதற்காக இராமேஸ்வரம் துறைமுகத்தில் சாகர்மாலா திட்டத்தின்கீழ், தமிழ்நாடு துறைமுகங்களின் உள்கட்டமைப்பு மேம்பாடு செய்வது குறித்து கோரினார்.

இராமேஸ்வரம் ஒரு புனித யாத்திரைத் தலமாகும். மேலும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2 கோடி பக்தர்கள் / சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இத்துறைமுகத்தில் அடிப்படை உள்கட்டமைப்பை மேம்படுத்துவது உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் சர்வதேச படகு சேவையையும் ஊக்குவிக்கும் என்று அமைச்சர் அவர்கள், ஒன்றிய அமைச்சரிடம் எடுத்து கூறினார்.

இராமேஸ்வரம் துறைமுகத்தில் ரூ.118 கோடி திட்ட செலவில், 250 மீட்டர் நீளமுள்ள அணுகு தோணித்துறை, சர்வதேச பயணிகள் முனையம் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) உள்ள துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடற்கரைகளுக்கான தேசிய தொழில்நுட்ப மையம் (NTCPWC) தயாரித்துள்ளது. இதன் மூலம் இராமேஸ்வரம் (இந்தியா) முதல் தலைமன்னார் (இலங்கை) இடையிலான 26 கடல் மைல் (48 கிலோமீட்டர்) தூரத்திற்கு சர்வதேச பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்க முடியும் என்று தெரிவித்தார்.

தோணித்துறை மற்றும் பயணிகள் முனையம் இராமேஸ்வரம் இரயில் நிலையத்திலிருந்து 500 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இது இந்தியாவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இலங்கையின் தலைமன்னார் வரை பயணிக்கும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் எடுத்துரைத்தார்.

இராமேஸ்வரம் (இந்தியா) மற்றும் தலைமன்னார் (இலங்கை) இடையேயான கப்பல் போக்குவரத்தை மீண்டும் தொடங்குவதற்கு, சாகர்மாலா திட்டத்தின்கீழ், ரூ.118 கோடி நிதி கோரி, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியுதவியினை ஒன்றிய அரசு விரைவில் வழங்க வேண்டுமென்று, அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

மேலும், பாக் விரிகுடா மற்றும் மன்னார் வளைகுடாவை இணைக்கும் பாம்பன் கால்வாய் மீன்பிடி கப்பல்கள் போன்ற சிறிய கப்பல்கள் கடல் வழியாக வர்த்தகம் செய்ய உதவுகிறது. இது இந்தியாவின் கிழக்கு மேற்குப் பகுதிகளை கடல் வழியாக இணைக்கிறது. இக்கால்வாயில் தற்போதுள்ள ஆழம் 2.0 மீட்டர் மட்டுமே. 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஷெர்சர் திறப்பினை கொண்ட பழைய இரயில் பாலம், ஒரு புதிய இரயில் பாதையுடன் தூக்குப் பாலமாக மாற்றப்பட்டு, பிரதமர் அவர்களால் 6.4.2025 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நாட்டின் முதுகெலும்பாக திகழும் உள்நாட்டு சரக்கு போக்குவரத்திற்கு சிறிய நடுத்தர அளவிலான கப்பல்களுக்கு கடல் வழியாக கிழக்குமேற்கு இணைப்பை வழங்குவதுடன் இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல்படை மற்றும் பாதுகாப்பு கப்பல்கள், இந்தியாவின் நீர்ப்பகுதிக்குள்ளாகவே பயணிக்க வழிவகுக்கும். இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ள துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடற்கரைகளுக்கான தேசிய தொழில்நுட்ப மையம், பாம்பன் கால்வாயை தூர்வாருவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து வருகிறது.

சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT) (துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடற்கரைகளுக்கான தேசிய தொழில்நுட்ப மையம்) விரிவான திட்ட அறிக்கையை சமர்ப்பித்தவுடன், இந்தியாவின் தெற்குப் பகுதியில் கடல் வழியாக கிழக்குமேற்கு இணைப்பை உறுதி செய்வதற்கு சாகர்மாலா திட்டத்தின்கீழ், 100% மானியமாக இத்திட்டத்திற்கான நிதி உதவியினை வேண்டுமென்று, ஒன்றிய அரசு வழங்க அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்களின் வருகை அதிகரிப்பதுடன், பல்வேறு வேலை வாய்ப்புகள் உருவாகுவதுடன், இம்மாவட்டத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரும்பங்காற்றும் என்றும் ஒன்றிய அமைச்சரிடம் எடுத்துரைத்தார்கள்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து, மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறைச் செயலாளர் டி.கே.இராமச்சந்திரன் அவர்களையும், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

இந்த சந்திப்பின்போது, தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், தமிழ்நாடு அரசின் உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் குமார் மற்றும் நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.

# கீழடி ஆய்வுகளை ஏற்பதில் ஒன்றிய அரசுக்கு ஏன் தயக்கம்?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி – சு. வெங்கடேசன் கேள்வி!





புதுடெல்லி, ஆக. 13 - கீழடி தொல்பொருள் அகழ்வாராய்ச்சி அறிக்கையை ஒன்றிய அரசு ஏற்று இன்னும் தமிழ்நாட்டின் தொன்மையை அறிவிக்காதது ஏன் என மக்களவையில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, மதுரை மார்க்சிஸ்ட் எம்.பி. சு.வெங்கடேசன் ஆகியோர் நேற்று முன்தினம் (11.08.2025) மக்களவையில் கேள்விகளைத் தொடுத்தனர்.

"தமிழ்நாட்டில் உள்ள கீழடி தொல்லியல் தளத்தின் அகழ்வாராய்ச்சி அறிக்கையை வெளியிடுவதில் ஏற்பட்டிருக்கும் தாமதத்திற்கான காரணங்கள் என்ன?

ஜனவரி 2023 இல் தயாரிக்கப்பட்டு இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்திற்கு (ASI) சமர்ப்பிக்கப்பட்ட கீழடி வரைவு அகழ்வாராய்ச்சி அறிக்கையை அரசாங்கம் பெற்றதா? அதை ஏற்றுக்கொண்டதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

இந்த வரைவு அறிக்கை மீது ஒன்றிய அரசாங்கத்தால் அல்லது ASI ஆல் அதிகாரப்பூர்வமாக ஆட்சேபனைகள் ஏதும் எழுப்பப்பட்டதா?

கீழடி அகழ்வாராய்ச்சி பற்றி தாக்கல் செய்யப்பட்ட அசல் அறிக்கையை மதிப்பாய்வு செய்ய அல்லது மாற்றியமைப்பதற்காக தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரி அல்லது அதிகாரிகள் பற்றிய விவரங்கள் என்ன?

கீழடி குறித்த இறுதி அறிக்கையை பொதுவில் வெளியிடுவதற்கும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கும் அரசு ஏதும் காலக்கெடு வைத்துள்ளதா?

கி.மு. 580 க்கு முந்தைய மிகவும்மேம்பட்ட நாகரிகத்தை சுட்டிக்காட்டும் பல அகழ்வாராய்ச்சி தளங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் இருக்கும் நிலையில், கீழடியை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?" என கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அளித்த பதிலில்,

"தமிழ்நாட்டில் கீழடியில் 2014-15 மற்றும் 2015-16 பருவங்களில் நடைபெற்ற தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் அறிக்கை ஜனவரி 2023 ஆம் ஆண்டு இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தால் (ASI) பெறப்பட்டது. அதன் பின்னர் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிபுணர்கள் சரிபார்ப்புக்கு அந்த அறிக்கை உட்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து ஆய்வு அம்சங்களிலும் நேர்மை, நியாயம் மற்றும் நெறிமுறைகளை உறுதி செய்வதற்கு இந்த செயல்முறை அவசியமாகிறது. மேலும் கண்டுபிடிப்புகளின் முக்கியத்துவத்தை தாமதப்படுத்தவோ அல்லது குறைக்கவோ இதில் எந்த உள்நோக்கமும் இல்லை.

முதல் இரண்டு பருவங்களுக்கான அகழ்வாராய்ச்சி அறிக்கை நிபுணர்களால் சரிபார்க்கப்பட்டு, ஆய்வு முறைமை, காலவரிசை, விளக்கம், விளக்கக்காட்சி மற்றும் பகுப்பாய்வு நுண்மை போன்றவற்றில் உள்ள குறைபாடுகள் குறித்து முன்னணி அகழ்வாராய்ச்சியாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீழடி தளத்தின் தொல்பொருள் திறனைக் கருத்தில் கொண்டு, 2014 மற்றும் 2017 க்கு இடையில் இந்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையால் அகழ்வாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 2018 முதல், தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறை அந்த இடத்தில் தொடர்ந்து அகழ்வாராய்ச்சி செய்து வருகிறது.

இருப்பினும், மாநில தொல்பொருள் துறையின் இறுதி அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை" என தெரிவித்துள்ளார் ஒன்றிய அமைச்சர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.8.2025) சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் குடிமைப் பொருட்களை வழங்கும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வில் தேனாம்பேட்டை மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் லவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி. வே.கமலா செழியன், சென்னை தெற்கு பொதுவிநியோகத் திட்ட இணைப் பதிவாளர் திருமதி எஸ்.லட்சுமி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.